**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 362/2019**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுடலைமுத்து | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | தாழையூத்து | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தாழையூத்து காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் கடையம் காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது, 01.05.2012ம் தேதி, மாலை 17.00 மணிக்கு கடையம் காவல் உதவி ஆய்வாளர் திரு.கனகராஜ், பயிற்சி உதவி ஆய்வாளர் திரு.ஞானசேகரன் மற்றும் நானும் வெடிபொருள் சம்ந்தமாக ரோந்து செல்லும்போது சேர்வைக்காரன்பட்டி பஞ்சாயத்து அம்பேத்கார் காலணியில் ரோந்து செல்லும் போது இரகசிய தகலின் பேரில் அம்பேத்கர் நகரை சேர்ந்த மாடக்கண் மகன் கல்யாணி என்பவர் வீட்டிற்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் முட்புதிரில் சோதனை செய்யும் போது முட்புதிரில் வெடிபொருள் தயாரிக்க கூடிய பொருட்கள் இருந்தது.

மேற்படி பொருட்கள் பற்றி கல்யாணியிடம் விசாரிக்கும்போது அரசு அனுமதியில்லாமல் வைத்திருப்பதாக கூறினார். அதில் கரிப்பொடி 1.600 கிராம் இருந்தது. சல்பர் 125 கிராம், அலுமினியம் 790 கிராம், சிகப்பு

கலர் உப்பு 390 கிராம், பச்சைக்கலர் கல்உப்பு 600 கிராம் இருந்தது. அந்த பொருள்களை பற்றி 1ம் எதிரியிடம் விசாரித்தபோது, அவருக்கு வெடிபொருள் தயாரிக்க பொருள் வைத்திருப்பதற்கு எந்தவித அரசு அனுமதியும் இல்லை என்று தெரிவித்தார். அத்தாட்சியில் கைப்பற்றி அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் கையெழுத்த செய்ய முன்வரராததால் நாங்களே கையெழுத்து செய்து அவரை கைது செய்து காவல் நிலையம் வந்து எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.90/2012 சட்டப்பிரிவு 5(A), 6 Indian Explosive substance Act 1908 படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அ.சா.ஆ.1 அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நாங்கள் சம்பவயிடத்திற்கு எவ்வாறு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் தனியாக ஒரு இருசக்கரவாகனத்திலும், நானும், பயிற்சி உதவியாளரும் ஒரு இருசக்கரவாகனத்திலும் சென்றோம். எதிரியிடம் வெடிபொருட்கள் இருக்கும் விபரம் காவல்நிலையத்தில் நாங்கள் இருக்கும் போது உதவி ஆய்வாளருக்கு தகவல் வந்ததா? என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் தங்கக்குமார், செல்வராஜ் ஆகியோர்களை அத்தாட்சியில் கையெழுத்து செய்ய உதவி ஆய்வாளர் அழைத்தாரா? என்றால் அழைத்தார். எழுத்து மூலமாக அழைக்கவில்லை. எங்கு வைத்து பொருட்கள் எடை போடப்பட்டது என்றால் சம்பவயிடத்தில் வைத்தே எடை போடப்பட்டது. அதற்குள்ள தராசு கடையில் இருந்த எடுத்து சென்றோம். நான் சொன்ன தேதியில், சொன்ன நாளில் எதிரியின் வீட்டிலிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக நிலையத்தில்

வைத்து எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:38:54 +0530